රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන
අමාත්‍යාංශය

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | *Independence Square, Colombo 07, Sri Lanka*

දුරකථනය / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: R/DO/PER.APP/2020
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2020.04.29

**<u>இணைந்த சேவையைச் சேர்ந்த புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் கடமையைப் பொறுப்பேற்றல்</u>**

i **<u>இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III மற்றும் வகுப்பு 2 தரம் II - நியமனத் திகதி 2020.03.16</u>**

ii **<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III (2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்) -</u>**
**<u>நியமனத்தைப் பொறுப்பேற்பதற்கான இறுதித் திகதி 2020.03.16</u>**

மேற்படி விடயம் தொடர்பில் எனது இணையிலக்கத்தையும் 2020.04.20 ஆம் திகதியையும் கொண்ட கடிதத்துடன் தொடர்புடையது.

02. மேற்குறித்த கடிதத்துக்கு இணங்க இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் சேவையின் வகுப்பு 3 தரம் III மற்றும் வகுப்பு 2 தரம் II மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II என்பவற்றின் புது உத்தியோகத்தர்கள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டிய திகதி 2020.05.04 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது.

03. எனினும் சில மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடைமுறையிலுள்ள ஊரங்குச் சட்டம் மற்றும் மாவட்டங்களினூடாகப் பயணம் செய்வதிலுள்ள தடங்கல்கள் அடங்கலாக தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் பெரும்பாலான உத்தியோகத்தர்களுக்கு அத்திகதியில் கடமைகளைப் பொறுப்பேற்பது சிரமமானதாக இருக்கும் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், புதிதாக நியமனம் பெற்ற உத்தியதியோகத்தர்களுக்கு சேவை நிலையங்களில் தாமதமின்றி கடமைகளைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதும் அவசியமாகவுள்ளது.

04. அலுவலகங்களை கொண்டு நடாத்துவது தொடர்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பிலும் கவனத்தில் எடுத்து, புதிய உத்தியோகத்தர்களை தாமதமின்றி சேவை நிலையங்களுக்கு அழைக்க வேண்டிய முறை பற்றிய அறிவுறுத்தல்கள் என்னால் உரிய நிறுவனத் தலைவர்களுக்கு விரைவாக வழங்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. அதனால், அந்த அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டும் வரையில் அது தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்/ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்